©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 49]

சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 19, 2012
மார்கழி 4, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (2D) எண் 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1)துறை 28 செப்டம்பர் திங்கள் 2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (பி) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக, எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை, அல்லது கருத்துரை எவையேனுமிருப்பின் அவற்றை, சென்னை–600 006–ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் தமிழ்நாடு அரசு செயலாளர், தொழிலாளர்–வேலை வாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் ( b ) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 10–2–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் I–பிரிவு 2 இல் 73 மற்றும் 74 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா 92/2010 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காடு வளர்ப்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:–

**விவர அட்டவணை**

**காடு வளர்ப்புப் பணியில் வேலைவாய்ப்பு**

| *(1)* | *(2)* | *(3)* |
|---|---|---|
| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள்* |
| 1. | நாற்றுப் பண்ணை மஸ்தூர்/நாற்றுப் பண்ணைப் பணியாளர் | நாளொன்றுக்கு 122.00 |

| *(1)* | *2)* | *(3)* | |
|---|---|---|---|
| 2. | மனை மஸ்தூர்/மனை காவலாள் | நாளொன்றுக்கு | 122.00 |
| 3. | தீ விபத்து தவிர்ப்பு ரோந்து காவலாள் | நாளொன்றுக்கு | 122.00 |
| 4. | சந்தன மரப் பாதுகாப்பு சுற்றுக் காவலாள் | நாளொன்றுக்கு | 122.00 |
| 5. | **நாட்கூலி மஸ்தூர்கள்** | | |

| | | | |
|---|---|---|---|
| *நிலை—I* | .. | *நாளொன்றுக்கு* | *132.00* |
| நிலை—II | .. | நாளொன்றுக்கு | 128.00 |
| நிலை—III | .. | நாளொன்றுக்கு | 122.00 |

**குறிப்பு:—**

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலை—I/வகை—A | .. | சென்னை, திருவள்ளுவர், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் |
| 2. | நிலை—I/வகை—B | .. | சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்கள் |
| 3. | நிலை—I/வகை—C | .. | ஏனைய மாவட்டங்கள் |

**(6) சந்தன மரக் கிடங்கிலுள்ள மஸ்தூர்**

| | | |
|---|---|---|
| வகை—I (இறுதியாக தூய்மை செய்தல்) | .. | நாளொன்றுக்கு ரூ.132.00 |
| வகை-II (மேலோட்டமாக தூய்மை செய்தல்) | .. | நாளொன்றுக்கு ரூ.128.00 |
| வகை—III (பிறபணி): | | நாளொன்றுக்கு ரூ.122.00 |

**(7) படல் கட்டும் பணிகள்**

| | | |
|---|---|---|
| மரப்பட்டையை உரித்தல் | .. | மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.1707.00 |
| மரப்பட்டையை ஏற்றுதல் | .. | மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.510.00 |
| மரப்பட்டையை வெட்டுதல் மற்றும் குவித்தல் | .. | 3 கன அடி கொண்ட குவியல் ஒன்று ரூ.393.00 |
| **(8) தைல மரம்** வெட்டுதல் மற்றும் குவித்தல் | .. | 3 கனஅடி கொண்டகுவியல் ஒன்று ரூ.357.00 |

*விளக்கங்கள் :*

**1.** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்.) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, கூடுதலாக 25 காசுகள் (இருப்பதைந்து காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில், ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாது.

**3.** நாட்கூலி வீதங்கள் மற்றும் அகவிலைப்படியில் விடுமுறை நாள் ஊதியங்களும் அடங்கும்.

**4.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

மோகன் பியாரே,
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

ந. அருள்,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.